செ.வெ.எண்.440/2020 நாள்: 25.06.2020

**ஈரான் நாட்டிலிருந்து, கன்னியாகுமரி மாவட்டத்திற்கு வருகைதரவுள்ள மீனவர்களை நிறுவன தனிமைப்படுத்தி, பாதுகாப்பாக தங்க வைக்கப்படவுள்ள இடங்களை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள் நேரில் பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், ஈரான் நாட்டிலிருந்து வருகை தரும் மீனவர்களை, தூத்தூர், புனித யூதா கல்லூரி மற்றும் தொலையாவட்டம், அன்னை வேளாங்கன்னி கல்லூரி உள்ளிட்ட கல்லூரிகளில், நிறுவன தனிமைப்படுத்தி, பாதுகாப்பாக தங்க வைப்பதற்கான இடத்தை இன்று (25.06.2020) நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார்கள்.

கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள மீனவர்கள், மீன்பிடித் தொழிலுக்காக ஈரான் நாட்டிற்கு சென்றபோது, கொரோனா வைரஸ் தொற்று காரணமாக, சொந்த மாவட்டத்திற்கு திரும்ப முடியாமல், ஈரான் நாட்டிலே தங்கியிருந்தார்கள். அங்குள்ள மீனவர்களை, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.எடப்பாடி கே.பழனிசாமி அவர்களின் பல்வேறு தொடர் நடவடிக்கைகள் மற்றும் வழிகாட்டுதலோடு, மாண்புமிகு தமிழ்நாடு அரசின் டெல்லி சிறப்புப் பிரதிநிதி திரு.ந.தளவாய் சுந்தரம் அவர்கள், மாண்புமிகு மத்திய வெளியுறவுத்துறை அமைச்சர் திரு.ஜெயசங்கர் அவர்களை நேரில் சந்தித்து, பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு, ஈரான் நாட்டில் தங்கியிருந்த மீனவர்கள் கப்பல் மூலம், சொந்த மாவட்டத்திற்கு அழைத்துவரப்படுகிறார்கள்.

ஈரான் நாட்டிலிருந்து வரும் மீனவர்களை, நிறுவன தனிமைப்படுத்தி, பாதுகாப்பாக தூத்தூர் - புனித யூதா கல்லூரி, தொலையாவட்டம் - அன்னை வேளாங்கன்னி கல்லூரி, அதங்கோடு - நாராயணகுரு கல்லூரி, வெள்ளமோடி - உதயா கல்லூரி, கடியப்பட்டணம் - புனித ஜாண்ஸ் கல்லூரி, அழகப்பபுரம் - அன்னை வேளாங்கன்னி கல்லூரி, செண்பகராமன்புதூர் - சி.எஸ்.ஐ. பொறியியல் கல்லூரி ஆகிய கல்லூரிகளில், தங்க வைக்கபடவுள்ளார்கள். அதற்காக, அக்கல்லூரிகளில் செய்யப்பட்டு வரும் முன்னேற்பாடு பணிகளை, மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், இன்று நேரில் சென்று, பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

முன்னதாக, தூத்தூரில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டு, கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.பிரசாந்த் மு.வடநேரே, இ.ஆ.ப., அவர்கள், நேரில் சென்று, பார்வையிட்டு, அங்கு செய்யப்பட்டு வரும் கொரோனா வைரஸ் பரிசோதனைகளையும், அப்பகுதி மக்களுக்கு வழங்கப்பட்டு வரும் உணவு உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்கள், மருத்துவ வசதிகள் போன்றவற்றை குறித்து, கேட்டறிந்து, ஆய்வு செய்தார்கள்.

நடைபெற்ற ஆய்வுகளில், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.இரா.ரேவதி அவர்கள், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மரு.என்.ஸ்ரீநாத், இ.கா.ப, அவர்கள், சார் ஆட்சியர் (பத்மநாபபுரம்) திருமதி.ஷரண்யா அறி, இ.ஆ.ப., அவர்கள், உதவி காவல் கண்காணிப்பாளர் (குளச்சல்) திரு.விஷ்வேஷ் பி.சாஸ்திரி, இ.கா.ப., உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு.சி.எ.ரிஷாப், இ.ஆ.ப., வட்டாட்சியர்கள் திரு.ராஜசேகர் (கிள்ளியூர்), திருமதி.ஜெகதா (கல்குளம்) மற்றும் அலுவலர்கள் உடனிருந்தார்கள்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.